# நமது தின கனி
காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 65 | 4 Pages | 07.10.2023 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 65 | 4 பக்கங்கள் | 07.10.2023 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## மினி நாடாளுமன்ற தேர்தலாக கருதப்படும் 5 மாநில தேர்தல் நவம்பரில் ஆரம்பம்? தேர்தல் ஆணையம் ஆலோசனை

டெல்லி,அக்.6

அருட்பிரகாசவள்ளலார்என்று அழைக்கப்படும் ராமலிங்க அடிகளாரின் 200வது பிறந்தநாள் கொண்டாட்ட நிறைவு விழா தமிழக ஆளுநர் மாளிகையில் நடைபெற்றது. இந்த விழாவில் காணொலி வாயிலாக பங்கேற்று உரையாற்றிய பிரதமர் மோடி, "பெண்களுக்கான 33% இடஒதுக்கீட்டை வள்ளலார் இருந்திருந்தால் பாராட்டியிருப்பார்" என்று கூறியுள்ளார். அருட்பிரகாச வள்ளலார் என்று அழைக்கப்படும் ராமலிங்க அடிகளார், கடலூர் மாவட்டம் சிதம்பரத்திலிருந்து 10 மைல் தொலைவில் உள்ளமருதூரில்05.10.1823இல்பிறந்தார்.கருணைஒன்றையேவாழ்க்கை நெறியாகக் கொண்டு வாழ்ந்தார். அனைத்து நம்பிக்கைகளிலும் உள்ள உண்மை ஒன்றே என்பதைக் குறிக்கும் வண்ணம் இவர் சமரச சுத்த சன்மார்க்கத்தை நிறுவினார். இவர் வடலூரில் சத்தியஞான சபையை எழுப்பினார். 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று பாடிய இவர், மக்களின் பசித்துயர் போக்க சத்தியதர்ம சாலையை நிறுவினார். அவர் ஏற்றிய அடுப்பு இன்றுவரை அணையாமல் தொடர்ந்து எரிந்த வண்ணம் பசியோடு இருக்கும் மக்களின் வயிற்றை நிரப்புகிறது.

மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் ஆகிய உரைநடைகளை எழுதினார். இவர் பாடிய பாடல்களின் திரட்டு திருவருட்பா என்று அழைக்கப்படுகிறது. இது 6 திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. திருவருட்பா ஆறாம் திருமுறையில், எந்தச் சமயத்தின் நிலைப்பாட்டையும் எல்லா மதநெறிகளையும் சம்மதம் ஆக்கிக் கொள்கிறேன் என்றார். சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் நிறுவிய அவர், சத்திய தருமச்சாலையையும், சித்தி வளாகத்தையும் உருவாக்கினார். இத்தனை பெருமைகளை கொண்ட வள்ளலாரின் பிறந்த நாளானஅக்டோபர்மாதம்5ம்தேதிஆண்டுதோறும்'தனிப்பெருங்கருணை நாள்'எனக்கடைப்பிடிக்கப்படும்எனதமிழ்நாடுஅரசுஅறிவித்திருக்கிறது. இந்நிலையில் அவரது பிறந்த நாளான இன்று சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் வள்ளலார் திருவுருவச்சிலை திறக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக பங்கேற்று உரையாற்றிய பிரதமர் மோடி, "இளைஞர்கள் தமிழிலும், சமஸ்கிருதத்திலும், ஆங்கிலத்திலும் புலமை பெற வேண்டும் என்று வள்ளலார் விரும்பினார். அவர்காலத்திற்கு முன்னதாகவே சிந்தித்தவர். கடவுளைப் பற்றிய வள்ளலாரின் பார்வை பல்வேறு மதங்களுக்கு அப்பாற்பட்டவை. இந்த உலகத்தில் ஒவ்வொரு அணுவிலும் அவர் கடவுளின் அம்சத்தை கண்டார். வள்ளலாரின் போதனைகள் அனைவருடனும் அனைவரின் வளர்ச்சிக்காகவும் நம்பிக்கைக்காகவும் சமத்துவ சமுதாயத்தை வலியுறுத்துவதாக இருந்தது. மகளிருக்கு வழங்கப்பட்ட 33 சதவீத இட ஒதுக்கீடு மசோதாவை அவர் உயிரோடு இருந்தால் பாராட்டி இருப்பார் என்று நம்புகிறேன்" என்று கூறினார்.

## 6.5 சதவீதமாக நீடிப்பு குறுகிய கால கடன் வட்டி மாற்றமில்லை: ரிசர்வ் வங்கி அறிவிப்பு



மும்பை, அக்.7

குறுகிய கால கடன்களுக்கான ரெப்போ வட்டி விகித்தை ரிசர்வ் வங்கி மாற்றம் செய்ய வில்லை எனவும்,ரெப்போ வட்டி 6.5 சதவீதமாக நீடிக்கும் எனவும் ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. இதனால் வீடு, வாகன, தனி நபர் கடன் தவணையில் மாற்றம் இருக்காது. ரிசர்வ் வங்கி இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை நிதிக்கொள்கை மறு சீராய்வு கூட்டம் நடத்துகிறது. இதில் வட்டி விகிதத்தில் மாற்றம் உட்பட பல்வேறு கொள்கை முடிவுகள் எடுக்கப்படுகின்றன. இந்த மாதத்துக்கான கூட்டம், ரிசர்வ் வங்கி கவர்னர் சக்தி காந்ததாஸ் தலைமையில் நடந்தது. இதில் எடுக்கப்பட்ட முடிவுகள் நேற்று வெளியிடப்பட்டன.

அதில் இடம் பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு: வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் குறுகிய கால கடன்களுக்கான ரெப்போ வட்டி 6.5 சதவீதமாகவே நீடிக்கும். இதில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. நிதிக்கொள்கை சீராய்வு கூட்டத்தில் பங்கேற்ற 6 பேர் செய்ய வேண்டாம் என ஏகமனதாக பரிந்துரை செய்துள்ளனர். 4 வது முறையாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. குழுவில், வட்டி மாற்றம் நுண்பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மை இல்லாததால் பண வீக்கம் அதிகரிப்பதற்கான அபாயங்கள் உள்ளன. எனவே, பண வீக்க விகிதத்தை 4 சதவீதத்துக்குள் கொண்டு வருவதற்கு உரிய கவனம் செலுத்தப்படும்.

பொருளாதார வளர்ச்சிக்கு இடையூறு இல்லாமல், பண வீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் நீண்டகால அடிப்படையில் நடவடிக்கைகள்மேற்கொள்ளப்படும். எனினும், நடப்பு நிதியாண்டில் பண வீக்கம் 5.4 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்படுகிறது. இதுபோல் நடப்பு நிதியாண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) 6.5 சதவீதமாக இருக்கும். பட்ஜெட்டில் நிர்ணயிக்கப்பட்ட நிதிப் பற்றாக்குறை இலக்கை கடைப்பிடிப்பதாக அரசு உறுதியளித்துள்ளது. ரெப்போ வட்டி அடிப்படையில்தான் வங்கிகள் கடன்வட்டிவிகிதத்தைநிர்ணயிக்கின்றன.வட்டிகுறைக்கப்படாததால், வீடு, வாகன, தனிநபர்கடன்களுக்கான இஎம்ஐ குறைய வாய்ப்பில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

★ ரூ.12,000 கோடி ரூ.2,000 நோட்டு இன்னமும் வங்கிக்கு வரவில்லை

2016ம் ஆண்டு நவம்பரில் பண மதிப்பிழப்பு நடவடிக்கைக்கு பிறகு புதிதாக ரூ.500 மற்றும் ரூ.2,000 நோட்டு அறிமுகம் செய்யப்பட்டது. இதில், ரூ.2,000 நோட்டை திரும்பப் பெறுவதாக ரிசர்வ் வங்கி அறிவித்தது. இதற்காக செப்டம்பர் 30ம் தேதி வரை அவகாசம் அளிக்கப்பட்டது. பின்னர் அக்டோபர் 7 வரை நீட்டிக்கப்பட்டது. இதன்படி, ரூ.2,000 நோட்டை வங்கியில் கொடுத்து மாற்றிக் கொள்வதற்கான கெடு இன்றுடன் முடிகிறது. இந்நிலையில், ரூ.3.43 லட்சம் கோடி மதிப்பிலான ரூ.2,000 நோட்டு வங்கிகளில் டெபாசிட் செய்யப்பட்டு விட்டது. ரூ.12,000 கோடிக்கான ரூ.2,000 மட்டுமே இன்னமும் வங்கிக்கு வரவில்லை. அதாவது 96 சதவீத நோட்டு திரும்ப வந்து விட்டன என ரிசர்வ் வங்கி நேற்று தெரிவித்தது.

# தமிழ்நாடு இழந்த அனைத்து உரிமைகளும் மீட்கப்படும் 'இந்தியா' கொள்கை கூட்டணி அரசியல் கூட்டணி அல்ல: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு




தஞ்சாவூர், அக். 7

'இந்தியா கூட்டணி அரசியல் கூட்டணி அல்ல. கொள்கை கூட்டணி' என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்து உள்ளார். திராவிடர் கழகத்தின் சார்பில் தஞ்சாவூர் மாநகராட்சி திடலில் கலைஞர் நூற்றாண்டு விழா, சமூக நீதிக்கான சரித்திர நாயகர் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பாராட்டு விழா நேற்று நடைபெற்றது. இதில், சமூக நீதிக்கான சரித்திர நாயகர் விருதை முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு, திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி வழங்கினார். தொடர்ந்து கி.வீரமணி தொகுத்த 'தாய் வீட்டில் கலைஞர்' என்ற நூலை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட அதனை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பெற்று கொண்டார்.

பின்னர் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: இந்திய ஒன்றிய அரசின் ஆட்சி கருத்தியலாக, கூட்டாட்சிக் கருத்தியல் மலர வேண்டும். அனைத்து தேசிய இனங்களும் உரிமை பெற்றவைகளாகவும், அனைத்து மாநில மொழிகளும் ஒன்றிய ஆட்சி மொழியாக உயர்ந்து நிற்க வேண்டும். அனைவர் குரலுக்கும் ஒரே மரியாதையும் மதிப்பும் இருக்க வேண்டும். இதுதான் இந்திய ஒன்றியமும் – அதில் உள்ளடங்கிய தமிழ்நாடும் இயங்க வேண்டிய முறை. அத்தகைய கூட்டாட்சிக் கருத்தியலை உள்ளடக்கிய இந்தியாவை அமைப்பதற்காகவே இந்தியா கூட்டணியை அமைத்துள்ளோம்.

இது அரசியல் கூட்டணி அல்ல. கொள்கைக் கூட்டணி. தேர்தல் வெற்றியை மட்டும் கணக்கில் கொண்டு இதனை நாங்கள் உருவாக்கவில்லை. அந்த வெற்றிக்குப் பின்னால் அமையப் போகும் ஆட்சியில் கோலோச்ச வேண்டிய கொள்கைகளை மனதில் வைத்தே நாங்கள் செயல்படுகிறோம். தமிழ்நாடு இதுவரை இழந்த அனைத்து உரிமைகளும் மீட்கப்படும். மீட்கப்பட்டே தீர வேண்டும். கல்வி உரிமை, நிதி உரிமை, சமூகநீதி உரிமை, மொழி உரிமை, இன உரிமை, மாநில சுயாட்சி உரிமை ஆகிய அனைத்தையும் மீட்போம். தமிழ்நாட்டின் நாடாளுமன்ற மக்களாட்சி உரிமைக்குக் கேடு விளைவிக்கப் பார்க்கிறார்கள். மக்கள் தொகை குறைந்துவிட்டது என்று சொல்லி நாடாளுமன்றத் தொகுதியின் எண்ணிக்கையைக் குறைக்கும் சதிச்செயலை அரங்கேற்றப் பார்க்கிறார்கள்.

இதரபிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான மகளிர் இடஒதுக்கீட்டை வழங்க மறுப்பது என்பது பா.ஜ.க.வின் உயர் வகுப்பு மனோபாவம், காலப்போக்கில் பட்டியலின இடஒதுக்கீட்டையும் காலி செய்துவிடும் ஆபத்தும் இதில் இருக்கிறது.தமிழ் மொழி காக்க, தமிழினம் காக்க, தமிழ்நாட்டை காக்க, இந்தியா முழுமைக்கும் சமதர்ம, சமத்துவ, சகோதரத்துவ, சமூகநீதியைக் காக்க எனது வாழ்க்கையைமுழுமையாகஒப்படைத்துக் கொள்கிறேன் என்பதுதான் எனக்கு திராவிடர் கழகம் நடத்தி இருக்கும் இந்த பாராட்டு விழாவில் நான் எடுத்துக் கொள்ளும் உறுதிமொழி. இவ்வாறு பேசினார்.

## புரட்டாசி விரதத்தால் கறிக்கோழி உற்பத்தி 25% குறைந்தது

பல்லடம், அக்.7

புரட்டாசி விரதத்தால் நுகர்வு குறைந்து பண்ணைகளில் கறிக்கோழிகள் தேக்கம் அடைவதை தவிர்க்க தமிழ்நாட்டில் கோழிப்பண்ணைகளில் 25 சதவீதம் கறிக்கோழி உற்பத்தி குறைக்கப்பட்டுள்ளது. பல்லடம் பகுதிகளில் சுமார் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கறிக்கோழி பண்ணைகள் உள்ளன. இதன் மூலம், தினசரி 10 லட்சம் கறிக்கோழிகள் உற்பத்தி செய்யப்பட்டு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும், கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட பிற மாநிலங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

கறிக்கோழி நுகர்வை பொறுத்து இதன் விற்பனை விலையை பல்லடத்தில் உள்ள கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழுவினர் தினசரி நிர்ணயம் செய்து அறிவிக்கின்றனர். புரட்டாசி விரதம் காரணமாக கறிக்



கோழி நுகர்வு குறைந்து விட்டது.

இதனால், கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழு முடிவின்படி 25 சதவீதம் உற்பத்தி குறைக்கப்பட்டு ள்ளது. இது குறித்து பல்லடம் கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழு செயலாளர் சின்னசாமி கூறியதாவது:

பல்லடம் சுற்று வட்டார பகுதிகளில் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கறிக்கோழி பண்ணைகள் மூலம் தினசரி 10 லட்சம் கறிக்கோழிகள் உற்பத்தியாகின்றன.

தமிழகம் மற்றும் கேரளா, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கு, கறிக்கோழிகள் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. தற்போது, புரட்டாசி மாத விரதத்தால் கோழி இறைச்சி நுகர்வு குறைந்துவிட்டது.

இதனால், கறிக்கோழிகள் பண்ணைகளில் தேக்கம் அடைவதை தவிர்க்கும் வகையில் 25 சதவீதம் உற்பத்தி குறைக்கப்பட்டுள்ளது. கோழி இறைச்சி நுகர்வு அதிகரிக்கும் போது வழக்கமான அளவிற்கு கறிக்கோழி உற்பத்தி செய்யப்படும். கறிக்கோழிகளுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவுகள் வழங்கப்படுவதால் புரதச்சத்து நிறைந்த கோழி இறைச்சி உணவை தாராளமாக சாப்பிடலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## கலெக்டர் அலுவலகத்தில் பேட்டரி வீல் சேர் வழங்க பயனாளிகள் தேர்வு

திருப்பூர், அக்.7

தமிழக அரசு மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் பல நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதன்மூலம், மாற்றுத்திறனாளிகள் பயனடைந்து வருகிறார்கள். அவர்களது வாழ்வாதாரமும் மேம்பட்டு வருகிறது.

இந்நிலையில், முதுகு தண்டவட பாதிப்பு உள்ளவர்களுக்கு பேட்டரி வீல் சேர் தமிழக அரசு வழங்கி வருகிறது.

இதற்கான பயனாளிகள் தேர்வு கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. இதில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டனர். இது குறித்து மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அதிகாரி வசந்த ராம்குமார் கூறுகையில், "முதுகு தண்டவட பாதிப்பு உள்ளவர்களுக்கு பேட்டரி வீல் சேர் வழங்க பயனாளிகள் தேர்வு நடந்தது. இதில், முதுகு தண்டவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான சோதனை நடைபெற்றது. இதில், தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு விரைவில் வீல் சேர் வழங்கப்படும்'' என்றார்.

## தூய்மை பணியாளர்கள் மேம்பாட்டு திட்ட கூட்டம்



திருப்பூர், அக். 7

திருப்பூரில் தூய்மை பணியாளர்கள் மேம்பாட்டு திட்டத்திற்கான சமூக கூட்டம் நடந்தது. இதனை மாநகராட்சி மேயர் தினேஷ் குமார் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். மாநகராட்சி கமிஷனர் பவன்குமார் முன்னிலை வகித்தார்.

இதில், துணை மேயர் பாலசுப்பிரமணியம் மற்றும் துணை ஆணையர்கள் சுல்தானா, மாநகர் நல அதிகாரி கௌரி சரவணன் மற்றும் உதவி ஆணையர் வினோத், மாநகராட்சி சுகாதார குழு தலைவர் கவிதா நேதாஜி கண்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இதில் தூய்மை பணியாளர்கள் மேம்பாட்டு திட்டங்கள் குறித்தும், அதனை செயல்படுத்தும் வழிமுறைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டன.

# தமிழ்நாட்டில் 15 மாவட்டங்களில் மிதமான மழைக்கு வாய்ப்பு: சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்



சென்னை, அக். 7

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், பெரம்பலூர், திருச்சி, நெல்லை, கன்னியாகுமரி, செங்கல்பட்டு, அரியலூர், தஞ்சை, ராமநாதபுரம் ஆகிய 15 மாவட்டங்களில் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக பகல் நேரத்தில் கடும் வெயிலும் இரவு நேரத்தில் கடும் குளிரும் நிலவி வருகிறது. அதே போல் காலை 9 மணி வரை பனி மூட்டம் காணப்படுகிறது. தமிழகத்தில் இந்த முறை வடகிழக்கு பருவமழை காலத்தில் வழக்கத்தை விட மழைப் பொழிவு அதிகமாக இருந்தது. நீர் நிலைகள் நிரம்பி வழிகின்றன. காற்றில் ஈரப்பதம் அதிகமாகவே உள்ளது.

தமிழ்நாட்டில்சென்னை உள்ளிட்டபல்வேறு பகுதிகளில்கனமழை வெளுத்து வாங்கியது. மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் எனவும், நகரின் ஒரு சில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது.

அதன்படி, சென்னையில் கிண்டி, முகலிவாக்கம், போரூர், ஆயிரம் விளக்கு, பாரிமுனை, சைதாப்பேட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் காலை முதல் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்த நிலையில், மதியம் மழை வெளுத்து வாங்கியது. தொடர்ந்து பெய்த இந்த மழையால் சாலைகளில் வெள்ளம்பெருக்கெடுத்து ஓடியது. இதனால் வாகன ஓட்டிகள் மற்றும் பொது மக்கள்மிகுந்தசிரமத்திற்கு ஆளாகினர்.

# பாரம்பரிய நெல் இரகங்களை பாதுகாக்க அரசு மானியத்தில் தூயமல்லி விதைகள் விநியோகம்: வேளாண்மை இணை இயக்குநர் தகவல்



திருப்பூர், அக். 7

தமிழ்நாட்டில் பாரம்பரிய நெல் ரகங்களை பாதுகாத்து மீட்டெடுக்கவும், அதன் மருத்துவ முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், மாநில வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நெல் ஜெயராமன் மரபுசார் நெல் ரகங்களின் பாதுகாப்பு இயக்கத்தின் கீழ், பாரம்பரிய நெல் ரக விதைகள், வேளாண்மைத்துறை மூலம் விநியோகம் செய்யப்படுகிறது.

அதையொட்டி, திருப்பூர் மாவட்டத்தில் காங்கயம், தாராபுரம், மடத்துக்குளம், உடுமலை மற்றும் வெள்ளகோவில் வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் பாரம்பரிய நெல் ரகமான தூயமல்லி இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

இந்த ரகங்களின் விற்பனை விலை ஒரு கிலோ ரூ.50 ஆகும். விவசாயிகளுக்கு50சதவீத அரசு மானியத்தில் ஒரு கிலோ ரூ.25 வீதம் வழங்கப்படுகிறது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 20 கிலோ வரை அரசு மானியத்தில் விதை நெல் வழங்கப்படுகிறது.

எனவே, சம்பா பருவ சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், அருகில் உள்ள வேளாண் அலுவலகங்களில் பாரம்பரிய நெல் விதைகளை வாங்கி பயன்பெறலாம் என வேளாண்மை இணை இயக்குநர் மாரியப்பன் தெரிவித்துள்ளார்.

# தஞ்சாவூர் அருகே பரபரப்பு வாலிபரின் வங்கி கணக்கில் ரூ.756 கோடி டெபாசிட்: அக்கவுண்ட் முடக்கம்


9:26 AM

Kotak Mahindra Bank

Request received for registering Kotak Bank a/c on UPI APP. Not you, call on 18602662666*. Never share card details/OTP/Expiry. *TCA

Rs.1000.00 is credited to Kotak Bank a/c no. 4263 on 06-10-23 as a reversal of debit transaction (UPI Ref no 327974246208). New balance is Rs. 7,563,965,907.39

தஞ்சாவூர் அருகே தனியார் நிறுவன ஊழியர் வங்கி கணக்கில் ₹756 கோடி வரவு வைக்கப்பட்டதாக செல்போனுக்கு வந்த குறுஞ்செய்தி.

திருக்காட்டுப்பள்ளி, அக்.7

தஞ்சாவூர் அருகே தனியார் நிறுவன ஊழியர் வங்கி கணக்கில் ரூ.756 கோடி வரவு வைக்கப்பட்டிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சென்னையை சேர்ந்த கார் டிரைவரின் வங்கி கணக்கில் ரூ.9 ஆயிரம் கோடியை ஒரு தனியார் வங்கி சமீபத்தில் வரவு வைத்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அதேபோன்றதொரு சம்பவம் தஞ்சாவூரில் நடைபெற்றுள்ளது. தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் அருகே வீரப்புடையான் பட்டி மேலத்தெருவை சேர்ந்த சந்திரசேகரன் மகன் கணேசன் (29). தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். விவசாய குடும்பத்தை சேர்ந்த கணேசனுக்கு ரஞ்சிதா என்ற மனைவியும், தாருண்யா, ஹர்ஷினி என்ற இரு மகள்களும் உள்ளனர்.

தஞ்சாவூரில் உள்ள கோடக் மகேந்திரா என்ற தனியார்வங்கியில்கணேசன், கடந்த 2 ஆண்டுகளாக வங்கி கணக்கு பராமரித்து வந்திருக்கிறார். நேற்றுமுன்தினம் நள்ளிரவு அவரது வங்கி கணக்கில் ரூ.756 கோடி வரவு வைக்கப்பட்டுள்ளதாக அவரது செல்போனுக்கு குறுஞ்செய்தி ஒன்று வந்தது. இதைக்கண்டு ஆச்சரியமடைந்த கணேசன், நேற்று காலை சம்பந்தப்பட்ட வங்கிக்கு சென்றுள்ளார். பின்னர் அங்கிருந்த மேலாளரிடம், தனது செல்போனில் ரூ.756 கோடி வரவு வைக்கப்பட்டுள்ளதாக வந்த குறுஞ்செய்தியை காட்டியுள்ளார்.

அதற்கு மேலாளர், இது தொடர்பாக அதிகாரிகளிடம் கேட்டு சொல்வதாக கூறி கணேசனை திருப்பி அனுப்பியிருக்கிறார். நேற்று மாலை வரை சம்பந்தப்பட்ட வங்கியில் இருந்து எந்தவித தகவலும் தெரிவிக்கவில்லை. அவரது வங்கி கணக்கிலிருந்து யாருக்கும் பணமும் அனுப்பவும் முடியவில்லை. இதனால் என்ன செய்வது என்று தெரியாமல் கணேசன் தவித்து வருகிறார். இது குறித்து கணேசனிடம் கூறுகையில், ‘எனது அக்கவுண்டில் ரூ.15,000 வைத்திருந்தேன். நண்பர் ஒருவருக்கு ஆயிரம் ரூபாய் அனுப்பினேன். அடுத்தசிலநிமிடங்களில் பணம் அனுப்பியது பெயில்டு என மெசேஜ் வந்தது. இதையடுத்து சிறிது நேரத்தில் எனது அக்கவுண்டிற்கு ஆயிரம் ரூபாய் கிரெடிட் ஆனது.

இதை தொடர்ந்து சில நிமிடங்களில் மற்றொரு மெசேஜ் வந்தது.

அதில் என்னுடைய அக்கவுண்டில் லெட்ஜரர் பேலன்ஸின் இருப்பு தொகையாக ரூ.756 கோடி இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இதை பார்த்த எனக்கு அதிர்ச்சியாகி விட்டது. இதையடுத்து சம்மந்தப்பட்ட வங்கிக்கு நேரில் சென்று தகவல் அளித்தேன். ஆனால், வங்கி ஊழியர்கள் இதுதொடர்பாக விசாரித்து உங்களுக்கு போன் செய்கிறோம் என்றனர். எனது வங்கி கணக்கிலிருந்து யாருக்கும் பணம் அனுப்ப முடியவில்லை. வங்கி கணக்கையும் முடக்கி விட்டனர்’ என்றார்.

# மதுரை ஏர்போர்ட்டில் அதிகாரிகள் இலங்கை பயணிகள் மோதல்

அவனியாபுரம், அக். 7

இலங்கையிலிருந்து மதுரை வந்த தனியார் விமானத்தில் 109 பயணிகள் இருந்தனர். இவர்களின் உடைமைகளை சோதனையிட்ட சுங்கத்துறை அதிகாரிகள், 4 பேரிடம் உயர் ரக மது பாட்டில்கள் மற்றும் சேலைகள் இருப்பதை கண்டுபிடித்தனர். அவற்றை விற்பனைக்காக கொண்டு வந்திருப்பதாக கூறியதால், அதிகாரிகள் அவற்றுக்கு சுங்க வரி விதித்தனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்த பயணிகள், அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அது முற்றியதால், அவர்களிடையே கைகலப்பு ஏற்பட்டது. இந்த சம்பவத்தில் மதுரை, வில்லாபுரம் மீனாட்சி நகர் பகுதியை சேர்ந்த பயணி செல்வகுமார் என்பவர் காயமடைந்தார். இதையடுத்து, அவர் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இவர் தவிர மற்ற மூன்று பயணியரும் இலங்கையை சேர்ந்தவர்கள். இந்த சம்பவம் தொடர்பாக, தங்கள் நாட்டு தூதரக அதிகாரிகளிடம் புகார் அளிப்போம் என கூறிய அவர்கள், சென்னை புறப்பட்டு சென்றனர். இந்த திடீர் மோதல் சம்பவத்தால் விமான நிலையத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.




# மணலி புதுநகர் அய்யா வைகுண்ட தர்மபதி கோயிலில் புரட்டாசி திருவிழா தொடக்கம்: ஏராளமான பக்தர்கள் தரிசனம்



திருவொற்றியூர், அக். 7


மணலி புதுநகரில் உள்ள அய்யா வைகுண்ட தர்மபதி கோயிலில் 10 நாள் புரட்டாசிதிருவிழாநேற்று காலை கொடியேற்றத்துடன்தொடங்கியது. இதில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர். முன்னதாக, மலர்களால் அலங்கரிக்கப்பட்ட திருநாமக்கொடியை அய்யாவின் பக்தர்கள் கையில் ஏந்தியவாறு பள்ளியறையை 5 முறையும், கொடிமரத்தை 5 முறையும் ‘அய்யா ஹரஹர சிவ’ என்ற நாமத்தை உச்சரித்தபடி சுற்றி வந்தனர். பின்னர் பதிவலம் வந்து, காலை 6.30 மணியளவில் திருநாமக்கொடி ஏற்றப்பட்டது.

இதை தொடர்ந்து பால் பணிவிடை, உகப்படிப்பும் இரவு 8 மணிக்கு காளை வாகனத்தில் அய்யா பதிவலம் வந்தார். திருவிழா நாட்களில் நாள்தோறும் மாலை திரு ஏடு வாசிப்பு நடக்கிறது. மேலும், நாள்தோறும் இரவு அலங்கரிக்கப்பட்ட அன்ன வாகனம், கருட வாகனம், மயில் வாகனம், ஆஞ்சநேயர் வாகனம், சர்ப்ப வாகனம், மலர்முக சிம்மாசன வாகனம், குதிரை வாகனம், காமதேனு வாகனம், குதிரை வாகனம், இந்திர வாகனம், பூம்பல்லக்கு வாகனங்களில் அய்யா பதிவலம் வருகிறார்.

விழாவின்8வது நாளான 13ம்தேதி இரவு 8.30 மணிக்கு சரவிளக்கு மற்றும் திருவிளக்கு பணிவிடை, 9 மணிக்கு திருக்கல்யாணதிருஏடு வாசிப்பு நடக்கிறது. முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் வரும் 15ம் தேதி நடக்கிறது. அன்று காலை 6 மணிக்கு பணிவிடை, உகப்படிப்பு, 6.30 மணிக்கு திருத்தேர் அலங்காரம், 10.30 மணிக்கு பணிவிடை நடக்கிறது. இதையடுத்து காலை 11.30 மணியளவில் அய்யா திருத்தேரில் வீதியுலா வருகிறார். தேரோட்டத்தை தெலங்கானா மாநில கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் வடம் பிடித்துஇழுத்துதொடங்கி வைக்கிறார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நலவாரிய தலைவர் எர்ணாவூர் ஏ.நாராயணன், முன்னாள் எம்பி எஸ்.ஆர். ஜெயதுரை, ஞானதிரவியம் எம்பி, திருவொற்றியூர் ஆகாஷ் மருத்துவமனை இயக்குனர் செல்வராஜ்குமார் உள்ளிட்ட பல்வேறு முக்கிய பிரமுகர்கள் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொள்கின்றனர். விழா ஏற்பாடுகளை அய்யா வைகுண்ட தர்மபதி அறக்கட்டளை தலைவர் பி.துரைப்பழம், பொது செயலாளர் ஏ.சுவாமிநாதன், பொருளாளர் பி.ஜெயக்கொடி, நிர்வாகிகள் டி.ஐவென்ஸ், வி.சுந்தரேசன், கே.ராமமூர்த்தி ஆகியோர் சிறப்பாக செய்து வருகின்றனர். மேலும், விழா நாட்களில் பக்தர்கள் சென்றுவர மாநகர போக்குவரத்து வசதி மற்றும் பொது சுகாதாரம், நவீன கழிப்பறை, உணவு வசதி போன்றவை கோயில் நிர்வாகம் சார்பில் செய்யப்பட்டுள்ளது.

# உடல் நலம் பாதித்த தந்தையை காப்பாற்ற திருட்டில் ஈடுபட்ட சிறுவன் கைது



அண்ணாநகர், அக். 7

கோயம்பேடு பழ மார்க்கெட்டில் 10க்கும் மேற்பட்ட கடைகளில் ஷட்டர் பூட்டை உடைத்து, உள்ளே புகுந்து பணம் மற்றும் செல்போன் திருடு போனது. சிசிடிவி காட்சிகளை பார்த்தபோது, சிறுவன்ஒருவன்திருட்டில் ஈடுபட்டது தெரிந்தது. புகாரின் பேரில், போலீசார் வழக்கு பதிந்து விசாரித்து வந்தனர். இந்நிலையில், நேற்று அதிகாலையில் மார்க்கெட் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான வகையில் சுற்றித்திரிந்த 14 வயது சிறுவனை போலீசார் மடக்கி, பிடித்து விசாரித்தனர். அதில், திருவள்ளூர் அடுத்த செவ்வாய்ப்பேட்டை பகுதியை சேர்ந்தவன் என்பதும், கை, கால்கள் இயங்காத நிலையில், உடல் நலம் பாதித்த அப்பா மட்டும் இருப்பதும், அவரை காப்பாற்றுவதற்காக 9ம் வகுப்பு படித்தபோது, படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு வேலை செய்வதற்கு முடிவெடுத்து, கோயம்பேடு மார்க்கெட்டில் கூலி வேலை கேட்டதும், சிறுவன் என்பதால் வேலை கொடுப்பதற்கு வியாபாரிகள் தயங்கியதும், வேலை ஏதும் கிடைக்காததால் அப்பாவை காப்பாற்ற கோயம்பேடு பழ மார்க்கெட்டில் கடைகளின் பூட்டை உடைத்து திருடியதும், வியாபாரிகள் மற்றும் கூலி தொழிலாளர்கள் அசந்து தூங்குவதைபயன்படுத்தி, அவர்களது செல்போன், பணத்தை திருடி வந்ததும் தெரிய வந்தது. அவனிடம் இருந்து 6 செல்போன்கள் பறிமுதல் செய்த போலீசார், கெல்லீஸ் உள்ள சிறுவர் சீர்திருத்த பள்ளியில் அவனை அடைத்தனர்.

# தரமணி 100 அடி சாலையில் ஆக்கிரமிப்பு கடைகள் அகற்றம்




வேளச்சேரி, அக். 7

வேளச்சேரிவிஜயநகரில் இருந்து பெருங்குடி செல்லும் தரமணி 100 அடி சாலையை ஆக்கிரமித்து வைக்கப்பட்ட கடைகளால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதாக, போக்குவரத்து போலீசாருக்கு புகார்கள் வந்தன. அதன்பேரில், சென்னை தெற்கு போக்குவரத்து துணை கமிஷனர் மகேஷ் குமார், அடையாறு போலீஸ் துணை கமிஷனர் பொன் கார்த்திக் தலைமையில் போக்குவரத்து போலீசார், மாநகராட்சி ஊழியர்கள் இணைந்து, அந்த சாலையை ஆக்கிரமித்து இருந்த 50க்கும் மேற்பட்ட கடைகளை நேற்று அகற்றினர். மேலும், நடைபாதையை ஆக்கிரமித்து வைக்கப்பட்டு இருந்த மரப்பலகைகளும் அப்புறப்படுத்தப்பட்டன.

# சிறுமி பலாத்கார வழக்கில் மருத்துவ பரிசோதனைக்கு சென்ற புழல் சிறை கைதி தப்பி ஓட்டம்: தேடும் பணி தீவிரம்




அண்ணாநகர், அக். 7

சிறுமி பலாத்கார வழக்கில், மருத்துவ பரிசோதனைக்கு அழைத்து வரப்பட்ட புழல் சிறை கைதி தப்பி ஓடினார். அவரை, போலீசார் தேடி வருகின்றனர். தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்தவர் செந்தில் ராஜா (42). கோயம்பேடு பகுதியில் டிராவல்ஸ் நிறுவனம் நடத்தி வந்துள்ளார். இவர், தனது அலுவலகத்தில் பணிபுரிந்த 16 வயது சிறுமியை பலாத்காரம் செய்ததாக, சிறுமியின் தாயார் கடந்த மே மாதம் 14ம் தேதி கோயம்பேடு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

அதன்பேரில், மகளிர் போலீசார் சிறுமியிடம் விசாரணை செய்து, பரிசோதனைக்காக அயனாவரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அங்கு சிறுமியை பரிசோதனை செய்த மருத்துவர்கள், மேல் சிகிச்சைக்காக எழும்பூரில் உள்ள அரசு மகப்பேறு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு, டாக்டர்கள் பரிசோதனையில், சிறுமி இரண்டு மாத கர்ப்பிணியாக இருப்பது தெரியவந்தது. இதனையடுத்து மகளிர் போலீசார், செந்தில்ராஜாவை போக்சோவில் கைது செய்து புழல் சிறையில் அடைத்தனர்.

4 மாதங்களாக சிறையில் இருந்த செந்தில்ராஜாவை நேற்று டி.என்.ஏ பரிசோதனைக்காக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு கோயம்பேடு போலீசார் பலத்த பாதுகாப்புடன் அழைத்து வந்தனர். அப்போது, செந்தில் ராஜா கழிவறை செல்வதாக கூறி, மருத்துவமனை கட்டிடத்தின் பின்புற சுவர் ஏறி குதித்து தப்பித்தார். இவரை பிடிக்கபோலீசார்விரட்டி சென்றனர். ஆனால் அதற்குள் செந்தில்ராஜா மின்னல் வேகத்தில் தப்பி சென்றார். இதனையடுத்து போலீசார் செந்தில் ராஜாவை தேடும் பணியில் தீவிரமாக இறங்கியுள்ளனர். போலீஸ் பாதுகாப்பில் இருந்த போக்சோ வழக்கு குற்றவாளி எப்படி தப்பி சென்றார் என போலீஸ் உயரதிகாரிகள் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# நாமக்கல்லில் முட்டை விலை 5 காசு உயர்வு



நாமக்கல், அக். 7

நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை, கடந்த ஒரு வாரமாக 490 காசுகளாக இருந்து வந்தது. இந்நிலையில்முட்டைவிலையில் 5 காசுகளை நேற்று என்இசிசி உயர்த்தியுள்ளது. இதன்படி ஒரு முட்டையின் கொள்முதல் விலை 495 காசுகளாக என்இசிசி நிர்ணயம் செய்துள்ளது.

பல்லடத்தில் நேற்று நடைபெற்ற தேசிய கறிக் கோழி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில், ஒரு கிலோ கறிக்கோழியின் விலை ரூ.113 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# மணல் கடத்திய 15 மாட்டு வண்டிகள் பறிமுதல் 10 பேர் கைது

## கே.வி.குப்பம், பேர்ணாம்பட்டில் எஸ்பி தனிப்படை போலீசார் ரெய்டு

வேலூர், அக்.7

வேலூர் மாவட்டத்தில் சட்ட விரோத கணிமவள கொள்ளையை தடுக்க எஸ்பி மணிவண்ணன் பல்வேறு நடவடிக்கைளை மேற்கொண்டு வருகிறார்.

அதன்படி வேலூர் எஸ்பியின் தனிப்படை போலீசார் பேர்ணாம்பட்டு மற்றும் கே.வி.குப்பம் காவல் நிலையங்களுக்கு உட்பட்ட பகுதியில் அதிரடியாக சோதனை நடத்தினர்.

அப்போது சட்டவிரோதமாக மாட்டு வண்டிகளில் ஆற்று மணல் கடத்தி வந்த 15 மாட்டு வண்டிகளை போலீசார் மடக்கி பிடித்து பறிமுதல் செய்தனர்.

மேலும் இதுதொடர்பாக 15 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு 10 பேரை போலீசார் கைது செய்தனர்.

மேலும் இதுபோன்ற குற்ற செயல்களில் ஈடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று எஸ்பி எச்சரித்துள்ளார். இதேபோல் மாவட்டம் முழுவதும் போலீசார் நடத்திய கள்ளச்சாராய ரெய்டில் ஆயிரம் லிட்டர் கள்ளச்சாராய ஊரல்களும், 60 கள்ளச்சாராயம் 87 மதுபாட்டில்கள் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்திய பைக்கை போலீசார் பறிமுதல் செய்தனர்.

மேலும் 200 கிராம் கஞ்சா 120 கிராம் குட்கா பொருட்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது. இது தொடர்பாக 11 வழக்குகளை போலீசார் பதிவு செய்துள்ளனர்.

# தாம்பரம் திருமலை நகர் பகுதியில் ஆக்கிரமிப்பு வீடுகள் அகற்றம்



தாம்பரம், அக். 7

தாம்பரம் மாநகராட்சி 3வது மண்டலம் 41வது வார்டு, திருமலை நகர் – நன்மங்கலம் சாலையை ஆக்கிரமித்து சிலர் வீடுகள், கடைகளை கட்டியிருந்தனர். இதனால் அப்பகுதியில் மழைநீர்வடிகால் அமைக்கும் பணி பாதிக்கப்பட்டது. இதனையடுத்து சம்பந்தப்பட்ட பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றி, மழைநீர் வடிகால்வாய் அமைக்க மாநகராட்சி ஆணையர் அழகுமீனா உத்தரவிட்டார். அதன்பேரில் நேற்று மாநகராட்சி அதிகாரிகள் பொக்லைன் இயந்திரம் மூலம் சாலை ஆக்கிரமிப்பு கட்டிடங்களை அகற்றினர்.

# வடகிழக்கு பருவமழை காலங்களில் குடிநீரின் தரத்தை உறுதிசெய்ய மாதிரி சேகரிப்பை அதிகரிக்க வேண்டும்: குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் உத்தரவு





சென்னை, அக். 7

வடகிழக்கு பருவமழை காலங்களில், குடிநீரின் தரத்தை உறுதி செய்யும் வகையில், மாதிரி சேகரிப்பை 300லிருந்து 600ஆக அதிகரிக்க வேண்டும் என்று சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் வினய் உத்தரவிட்டுள்ளார். வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம், சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் நடந்தது.

கூட்டத்துக்கு,சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குனர் டி.ஜி.வினய் தலைமை வகித்து பேசியதாவது: சென்னை குடிநீர் வாரியம் சார்பில் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், தற்போது, பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீரின் தரத்தை உறுதிசெய்வதற்காக நாளொன்றுக்கு 300 குடிநீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வகம் மூலம் பரிசோதிக்கப்படுகிறது. வடகிழக்கு பருவமழை காலங்களில் குடிநீரின் மாதிரி சேகரிப்பு 600ஆக அதிகரிக்கப்பட வேண்டும். குடிநீரில் குளோரின் அளவு மற்றும் அதில் கலந்துள்ள திடப்பொருட்களின் அளவை பரிசோதிக்க, நாளொன்றுக்கு 2000 மாதிரிகள் என்பதை 3000 மாதிரிகளாக அதிகரிக்கப்பட்டு களப்பணியாளர்களால் பரிசோதிக்கப்பட வேண்டும்.

குறிப்பாக குடிநீரின் தரம் குறித்து பொதுமக்களிடமிருந்து குறைகள் தெரிவிக்கப்படும் போது, சம்பந்தப்பட்ட பகுதிகளில் அதிக அளவில் குடிநீர் மாதிரிகள் எடுக்கப்பட வேண்டும். மேலும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பகுதிகளுக்கு வழங்கப்படும் குடிநீரின் தரத்தினை ஆய்வு செய்வதற்காக தினம்தோறும் குடிநீர் மாதிரிகள் சேகரிக்கப்பட வேண்டும். குடிநீர் வினியோக நிலையங்களுக்கு தேவையான பிளீச்சிங் பவுடர், படிகாரம், சுண்ணாம்பு போன்ற ரசாயன பொருட்கள் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட வேண்டும்.

மழைக்காலங்களில் குடிநீர் விநியோக நிலையங்களில் தேங்கும் மழைநீரினை இறைக்க பெரிய நீர் உறிஞ்சும் இயந்திரங்கள் மற்றும் சிறிய நீர் உறிஞ்சும் இயந்திரங்கள் குடிநீர் விநியோக நிலையங்களில் தயார் நிலையில் வைக்கப்பட வேண்டும். அனைத்து குடிநீர் சுத்திகரிப்பு மற்றும் விநியோக நிலையங்களிலும் உள்ள இயந்திரங்கள் மற்றும் ஜெனரேட்டர்கள் நல்ல முறையில் பராமரிக்கப்பட வேண்டும். ஜெனரேட்டர்களுக்கு தேவையான எரிபொருட்கள் இருப்பில் வைத்திருக்கப்பட வேண்டும். குடிநீர் வினியோக நிலையங்களிலும், கழிவுநீரிறைக்கும் நிலையங்களிலும் மணல் மூட்டைகள் பாதுகாப்பு காரணங்களுக்காக தயார் நிலையில் வைக்கப்பட வேண்டும்.

கடந்த மே மாதம் முதல் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள கழிவுநீர் குழாய்களில் மீண்டும் அடைப்பு ஏற்படாத வண்ணம் தொடர் கண்காணிப்புப் பணிகளை உறுதி செய்ய வேண்டும்.

அனைத்து களப்பணியாளர்களும் சம்பந்தப்பட்ட பகுதிகளில் தயார் நிலையில் இருக்க வேண்டும். பொதுமக்களிடமிருந்து தொலைபேசி மூலமாகவோ, நேரிடையாகவோ அல்லது சமூக ஊடகங்கள் மூலம் பெறக்கூடிய குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். கூட்டத்தில், தலைமைப் பொறியாளர் ஆர்.சிவமுருகன், கண்காணிப்புப் பொறியாளர்கள் ராதாகிருஷ்ணன், ரவீந்திரநாதன் மற்றும் அனைத்துப் பகுதிப் பொறியாளர்கள் உள்பட பல்வேறு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

★ தயார் நிலையில் 537 இயந்திரம்

கழிவுநீர் அடைப்பு ஏற்படும் இடங்கள் கண்டறியப்பட்டு, தூர்வாரும் இயந்திரங்கள், பெரிய ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் சிறிய ஜெட்ராடிங் இயந்திரங்கள், ஜெட்டிங் மற்றும் உறிஞ்சும் இயந்திரங்கள் மற்றும் கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்கள் என மொத்தமுள்ள 537 இயந்திரங்களும் தயார் நிலையில் வைக்கப்பட வேண்டும்.

★ 24 மணி நேர பணி

மழைக்காலங்களில் கழிவுநீர் அடைப்பு, கழிவுநீர் தேக்கம் மற்றும் மழைநீர் அகற்றும் பணிகளை சீர் செய்யும் வகையில் அனைத்து களப்பணியாளர்களும் 24 மணி நேரமும் பணிகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். சென்னை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர், பாதாள சாக்கடை திட்டப் பணிகள் நடைபெறும் இடங்களில் உரிய அறிவிப்பு பலகைகள், பாதுகாப்பு தடுப்புகள் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# மருத்துவ கல்லூரிகள், தனியார் நிறுவனங்களில் 2வது நாளாக சோதனை

சென்னை,அக்.7

சென்னைஅடையாறில் உள்ள பாரத் பல்கலைக்கழக அலுவலகம், தி.நகர் ஜிஎன் செட்டி தெருவில் உள்ள நட்சத்திர ஓட்டல், குரோம்பேட்டையில் உள்ள மருத்துவ கல்லூரி, வண்டலூர் பொறியியல் கல்லூரி, பாலிடெக்னிக், பல் மருத்துவம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை அடுத்த தண்டலம் பகுதியில் உள்ள மருத்துவ கல்லூரி, வாலாஜாபாத் அருகே உள்ள மதுபான தொழிற்சாலைகள், மாமல்லபுரம் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள ரிசார்ட் மற்றும் புதுச்சேரி மாநிலம் அகரம் பகுதியில் உள்ள மருத்துவ கல்லூரி என 40 இடங்களில் வருமான வரித்துறையினர் 2வது நாளாக நேற்றும் சோதனை நடத்தினர்.

இந்த சோதனையில் ரொக்க பணம், பல முக்கிய ஆவணங்கள் சிக்கியதாக கூறப்படுகிறது. சோதனையின்இடையேநேற்று மதியம் மற்றொரு வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

# மழை வெள்ளத்தின் போது பேரிடர் மீட்பு படையினர் தயாராக இருக்க வேண்டும்: போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் உத்தரவு

சென்னை, அக்.7

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை விரைவில் தொடங்க உள்ள நிலையில், சென்னை மாநகர காவல் எல்லையில் மழைக்காலத்தில் ஏற்படக்கூடிய வெள்ளம் மற்றும் இயற்கை பேரிடர்களின் போது பொதுமக்களை பாதுகாக்கும் வகையில் எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து சென்னை மாநகர போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் மாவட்ட பேரிடர் மீட்பு படையினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மழைக்காலங்களில் விழும் மரங்களை உடனுக்குடன் வெட்டி அப்புறப்படுத்தவும், தேங்கியுள்ள இடங்களில் இருந்து தண்ணீரை வெளியேற்ற ராட்சத நீர் இறைப்பான் உள்ளிட்ட உபகரணங்களை தயார் நிலையில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.அதன்படி, சென்னை ராஜரத்தினம் மைதானத்தில், சென்னை மாநகர காவல்துறையுடன் ஆயுதப்படையினர் மற்றும் மாவட்ட பேரிடர் மீட்பு படையினர் தயார் நிலையில் வைத்துள்ள உபகரணங்களை போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் நேரில் ஆய்வு செய்தார். எந்த நேரத்திலும் பேரிடர் மீட்பு குழுவினர் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இந்த ஆய்வின் போது சென்னை மாநகர தலைமையிட கூடுதல் கமிஷனர் கபில் குமார் சரத்கர், ஆயுதப்படை துணை கமிஷனர் ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட அதிகாரிகள் உடனிருந்தனர்.

# கள்ளக்குறிச்சி மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் வருமானத்திற்கு அதிகமாக 856 சதவீதம் சொத்து குவிப்பு: நெல்லை லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்கு



நெல்லை, அக். 7

கள்ளக்குறிச்சி மாவட்ட தொழில் மைய பொது மேலாளராக இருந்த முருகேஷின் நெல்லை வீட்டில் நடத்திய சோதனையைத் தொடர்ந்து அவரும், அவரது மனைவி சகிலாவும் வருமானத்தை விட 856 சதவீதம் அதிகமாக சொத்து சேர்த்தாக நெல்லை லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்குபதிவு செய்துள்ளனர். தூத்துக்குடி மாவட்டம், குலசேகரன்பட்டினத்தைச் சேர்ந்தவர் முருகேஷ் (49). இவர், கடந்த சில மாதங்களுக்கு முன்பு கள்ளக்குறிச்சி மாவட்ட தொழில் மைய பொது மேலாளராக மாற்றப்பட்டார். அப்போது அவர் மீது எழுந்த புகார்கள் தொடர்பாக சஸ்பெண்ட் செய்யப்பட்டார்.

இதையடுத்து முருகேஷ் பாளையங்கோட்டை ரகுமத்நகரிலுள்ள தனது வீட்டில் வசித்து வந்தார். இந்நிலையில் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்த புகாரின் பேரில், முருகேஷின் ரஹ்மத்நகர் வீடு மற்றும் அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் 13 மணி நேரம் லஞ்ச ஒழிப்பு போலீசார் தீவிர சோதனை நடத்தினர். இதில் 20 பவுன் நகைகள், ரூ.1.77 லட்சம் மற்றும் ரூ.8 கோடி மதிப்பிலான 250 ஆவணங்களை லஞ்ச ஒழிப்பு போலீசார் பறிமுதல் செய்தனர். இதுகுறித்து லஞ்ச ஒழிப்பு துறை போலீசார் முருகேஷ் மற்றும் அவரது மனைவி சகிலா ஆகிய இருவர் மீதும் லஞ்சம் வாங்குதல், வருமானத்திற்கு அதிகமாக சொத்துக்களை குவித்தல் என 3 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

அதில், கடந்த 142014 முதல் 3132022 வரையிலான காலகட்டத்தில் மட்டும் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் முருகேஷ் ரூ.7 கோடியே 11 லட்சத்து 47 ஆயிரத்து 737 வரையில் சொத்துக்கள் சேர்த்துள்ளார். இந்த காலகட்டங்களில் அவரது சட்டபூர்வமான வருவாயினங்கள், சம்பளம், வங்கி கணக்கு பண வட்டி உள்ளிட்டவற்றில் இருந்து செலவினங்கள் போக வர வேண்டிய வருவாய் ரூ.61 லட்சத்து 16 ஆயிரத்து 438 மட்டுமே ஆகும். ஆனால் அவரது வருமானத்தை விட 856 சதவீதம் அதிகமாக சொத்து சேர்த்தது தெரிய வந்தது. அவரது மனைவி சகிலாவும் உடந்தையாக இருந்துள்ளார் என்று வழக்குபதிவு செய்யப்பட்டுள்ளது. கல்லூரி காலகட்டத்திலயே முருகேஷின் தந்தை இறந்து விட்டார். இதனால் அவருக்கு கருணை அடிப்படையில் மாவட்ட தொழில் மையத்தில் அலுவலக உதவியாளர் பணி 90களில் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# வனப்பகுதியில் பதுக்கிய 1000 லிட்டர் சாராய ஊறல் அழிப்பு

## 2 பேருக்கு வலை: ஒடுகத்தூர் அருகே காட்டுக்கு நடுவே ஊறல்

ஒடுகத்தூர், அக்.7

ஒடுகத்தூர்அருகே மலை பகுதியில் காட்டுக்கு நடுவே பதுக்கி வைத்திருந்த சுமார் 1000 லிட்டர் சாராய ஊறலை வேப்பங்குப்பம் போலீசார் கைப்பற்றி அழித்தனர். அணைக்கட்டு தாலுகாவிற்கு உட்பட்ட அல்லேரி, பீஞ்சமந்தை, ஜார்தான் கொல்லை, பலாம்பட்டு போன்ற பல்வேறு மலை ஊராட்சிகளில் 100க்கும் மேற்பட்ட மலைகுக்கிராமங்கள் உள்ளது. இந்த மலைப்பகுதிகளில் சட்ட விரோதமாக கள்ளச்சாராயம் காய்ச்சுவது, கஞ்சா செடிகள் வளர்ப்பது போன்ற சமூக விரோத செயல்கள் நடந்து வருகிறது. ஏற்கனவே, கள்ளச்சாராயம் குடித்து விட்டு ஏராளமானோர் உயிரிழந்த நிலையில் அதனை முற்றிலுமாக ஒழிக்கும் வகையில் எஸ்பி தலைமையில் மலைபகுதிகளில் சாராய தடுப்பு நடவடிக்கைகள் அவ்வப்போது நடந்து வருகிறது. ஆனாலும், கள்ளச்சாராயம் காய்ச்சுவது முற்றிலுமாக தடுக்க முடியவில்லை. இந்நிலையில், எஸ்பி மணிவண்ணன் உத்தரவின் பேரில் வேப்பங்குப்பம் இன்ஸ்பெக்டர் நாகராஜன் தலைமையிலான 8 பேர் கொண்ட போலீசார் ஒடுகத்தூர் அடுத்த பீஞ்சமந்தை ஊராட்சிக்கு உட்பட்ட தேக்குமரத்தூர் மலைபகுதியில் சாராய தடுப்பு வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது, காட்டுக்கு நடுவேசெல்லும்கானாற்று ஓடை பகுதியில் சோதனை நடத்திய போது, அங்கு கள்ளச்சாராயம் காய்ச்சிவதற்காக மண்ணால் ஆனா அடுப்புகளுடன் புதிதாக 2 பேரல்கள் அமைக்கப்பட்டு இருந்தது தெரியவந்தது. அந்த இரண்டு பேரல்களை திறந்து பார்த்த போது அதில் கள்ளச்சாராயம் காய்ச்சிவதற்காக சுமார் 1000 லிட்டர் சாராய ஊறல்கள் இருந்தது தெரிய வந்தது. அதனை கைப்பற்றிய போலீசார் சாராய ஊறலை கீழே கொட்டி அழித்தனர். அதேபோல், மண் பானையில் வைத்திருந்த 60 லிட்டர் கள்ளச்சாராயத்தையும் அழித்தனர். மேலும், அங்கிருந்த பிளாஸ்டிக் பேரல்கள், அடுப்பு உள்ளிட்ட பொருட்கள் பயன்படுத்தாத வகையில் தீயிட்டு அழித்தனர். மேலும், இது தொடர்பாக வழக்குப்பதிந்து செங்காடு கிராமத்தை சேர்ந்த தமிழ், பழனி ஆகிய இருவரையும் வலை வீசி தேடிவருகின்றனர்.

# வெண்டிபாளையம் குப்பைக்கிடங்கில் தீ விபத்து

ஈரோடு, அக். 7

ஈரோடு வெண்டிபாளையத்தில் மாநகராட்சி குப்பை கிடங்கு உள்ளது. இங்கு மக்கும், மக்காத குப்பை மலைபோல் பல டன் அளவுக்கு குவித்து வைக்கப்பட்டுள்ளது. இந்த குப்பைக்கிடங்கினை சுற்றியும் ஏராளமான குடியிருப்புகளில் மக்கள் வசித்து வருகின்றனர். இந்நிலையில் இந்த குப்பைக்கிடங்கில்நேற்று முன்தினம் இரவு திடீரென கரும்புகையுடன் தீப்பிடித்தது. காற்றின் வேகத்தால் தீ மளமளவென பரவி, கொளுந்து விட்டு எரிந்தது.

தீயால் அப்பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சியளித்ததால், மக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகினர். இது குறித்து தகவல் அறிந்த ஈரோடு தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து தீணை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். சுமார் 2 மணி நேரத்திற்கு மேலாக தண்ணீரை பீய்ச்சி அடித்து தீயை முழுமையாக அணைத்தனர். இந்த தீ விபத்து அணைக்கப்படாத பீடி அல்லது சிகரெட் வீசி சென்றதால் ஏற்பட்டிருக்கலாம் என தீயணைப்பு துறையினர் தெரிவித்தனர்.

# கூடங்குளம் அணுமின் நிலையத்தில் 1000 மெகாவாட் மின் உற்பத்தி பாதிப்பு



வள்ளியூர், அக்.7

நெல்லை மாவட்டம் கூடங்குளம் அணுமின் நிலையத்தில் தலா 1000 மெகாவாட் மின்திறன் கொண்ட இரண்டு அணு உலைகள் அமைக்கப்பட்டு மின் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. இந்த இரண்டு அணு உலைகள் மூலம் 2 ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. மேலும் அங்கு 3, 4வது அணு உலைகள் அமைக்கும் பணி 90 சதவீதம்நிறைவடைந்துள்ளது. இந்நிலையில் 5 மற்றும் 6வது அணுமின் உலைகளுக்கான பூர்வாங்க பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் முதலாவது அணு உலையில் வருடாந்திர பராமரிப்பு காரணமாக மின் உற்பத்தி நிறுத்தப்பட்டிருந்த சூழலில் கடந்த மாதம் 6ம் தேதி முதல் 1000 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது.

இந்நிலையில் நேற்று மதியம் 12.30 மணியளவில் முதல் உலையில் திடீரென ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக மின் உற்பத்தி நிறுத்தப்பட்டது. இதனால் 1000 மெகா வாட் மின் உற்பத்தி பாதிப்பிற்குள்ளாகியுள்ளது. தொழில்நுட்பகோளாறை சரி செய்யும் பணியில் இந்திய–ரஷ்ய அணு விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். விரைவில் பழுது சரி செய்யப்பட்டு மின் உற்பத்தி தொடங்கும் என்று அணு மின் நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அதே நேரத்தில் 2வது அணுமின் நிலையத்தில் 1000 மெகாவாட் மின்உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

# அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் காலை உணவுத்திட்டம் கோரி வழக்கு: ‘அரசு கொள்கை முடிவில் தலையிட முடியாது’ என ஐகோர்ட் கிளை கருத்து




மதுரை, அக். 7

தூத்துக்குடியைச் சேர்ந்தபிரேசில்,ஐகோர்ட் மதுரைகிளையில்தாக்கல் செய்த மனு: தமிழ்நாட்டில் உள்ள அரசு துவக்கப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு அரசு துவக்கியுள்ளது. சுமார் 31 ஆயிரம் அரசு பள்ளிகளில் இத்திட்டம் பயன்பாட்டில் உள்ளது. ஏழை, எளிய மக்களின் குழந்தைகள் ஏற்கனவே மதிய உணவு திட்டத்தில் பயன் பெறுகின்றனர். ஆனால், காலை உணவு திட்டத்தில் பலர் பயன் பெற முடியாத நிலை உள்ளது. தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்ட கடலோர பகுதியில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் இந்த திட்டம் செயல்பாட்டில் இல்லை.

கடற்கரையோரத்தில் வசிக்கும் மீனவ மக்கள் ஏற்கனவே பொருளாதார ரீதியாக மிகவும் மோசமான நிலையில் உள்ளனர். பல மீனவர்களின் குழந்தைகள் ஏழ்மையால் படிப்பை தொடர முடியாத நிலையில் உள்ளனர். கடலோர பகுதிகளில் அதிகளவில் அரசு உதவி பெறும் பள்ளிகள் தான் உள்ளன. இங்கு, காலை உணவு திட்டம் செயல்பட்டால் மீனவ மாணவர்கள் மிகுந்த பலனளிக்கும். எனவே, கடலோர பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் காலை உணவு திட்டத்தை அமல்படுத்துமாறு உத்தரவிட வேண்டும். இவ்வாறு கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் எம்.சுந்தர், ஆர்.கலைமதி ஆகியோர் முன் நேற்று விசாரணைக்கு வந்தது. அரசு பிளீடர் திலக்குமார் ஆஜராகி, ‘‘அரசு பள்ளி மாணவர்களுக்கான காலை உணவுத் திட்டம் என்பது அரசின் கொள்கை முடிவோடு தொடர்புடையது. இது அரசு பள்ளிகளில் மட்டும் தான் செயல்படுத்தப்படுகிறது. கிராமம், ஒன்றியம், நகரம் மற்றும் மாநகராட்சி பகுதிகளில் உள்ள அரசு துவக்கப்பள்ளிகளில் இத்திட்டம் பயன்பாட்டில் உள்ளது’’ என்றார். இதையடுத்து நீதிபதிகள், அரசுத்தரப்பில் உரிய விளக்கம் பெற்று தெரிவிக்க உத்தரவிட்டு விசாரணையை அடுத்த வாரத்திற்கு தள்ளி வைத்தனர்.

நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023

07.10.2023





# நீண்ட நாட்களுக்கு பிறகு இணையும் விமல் - சூரி கூட்டணி

விமல், சூரி ஆகியோர் நீண்ட நாட்களுக்கு பிறகு இணைந்து நடித்துள்ள புதிய படம் 'படவா'. இதில் நாயகியாக ஶ்ரீதா நடிக்கிறார். ராம் வில்லனாக வருகிறார். தேவதர்ஷினி, நமோ நாராயணன், வினோதினி, டி.எஸ்.ஆர். சரவண சக்தி, சாம் உள்பட 40க்கும் மேற்பட்ட நடிகர் நடிகைகள் நடித்துள்ளனர். இந்தப் படத்தை கே.வி.நந்தா டைரக்டு செய்துள்ளார். இசையமைப்பாளர் ஜான் பீட்டர் தயாரித்துள்ளார். விவசாயம் பற்றி பேசும் சமூக பொறுப்புள்ள படமாக தயாராகிறது. சூரிக்கு படத்தில் பெரிய கேரக்டர் அமைந்துள்ளது. படத்தில் ஆறு பாடல்கள் உள்ளன. ராமலிங்கம் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

படம் பற்றி டைரக்டர் பேரரசு பேசும்போது, "ஜான் பீட்டர் படத்தின் தயாரிப்பாளர் மட்டுமின்றி இசையமைப்பாளராகவும் இருக்கிறார். பாடல்கள் ஒவ்வொன்றும் அவ்வளவு அருமையாக இருக்கிறது. விமல் வெற்றி அடைந்து கொண்டே இருக்க வேண்டும். 'படவா' திரைப்படம் மிகப்பெரிய வெற்றி பெற வேண்டும். இந்த திரைப்படம் விவசாயத்தை பற்றியது. 'கடைசி விவசாயி' தேசிய விருது பெற்றது. டிரைலரை பார்க்கும் போது அது போன்ற திரைப்படமாகத்தான் 'படவா' இருக்கும் என்று தோன்றுகிறது" என்றார்.



# பொங்கலுக்கு வெளியாகும் வெங்கடேஷின் சைந்தவ்

வெங்கடேஷின் 75வது படமாக உருவாகி வரும் 'சைந்தவ்' படத்தில் அவரது கதாபாத்திரம் எப்படி இருக்கும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டது. ஹிட் வெர்ஸ் படத்தை இயக்கிய சைலேஷ் கொலானு படத்தை இயக்கி இருக்கிறார். நிஹாரிகா என்டர்டெயின்மென்ட் சார்பில் வெங்கட் பொயனபள்ளி படத்தை தயாரித்துள்ளார். வெங்கடேஷுக்கு பொங்கல் வெளியீடு எப்போதும் நல்ல வகையில் அமைந்து இருக்கிறது. அந்த வகையில் இப்படமும் பொங்கலுக்கு திரைக்கு வரும் என படக்குழு தெரிவித்துள்ளது. 'சைந்தவ்' சண்டை காட்சிகள் நிறைந்த ஆக்ஷன் திரைப்படமாக உருவாகி இருக்கிறது.

தமிழ் சினிமாவில் முன்னணி நடிகராக இருக்கும் ஆர்யா, இப்படத்தில் ஸ்டைலிஷான கதாபாத்திரத்தில் நடித்து இருக்கிறார். பாலிவுட்டை சேர்ந்த பன்முகத் தன்மை கொண்ட நடிகரான நவாசுதீன் சித்திக், சைந்தவ் படத்தில் விகாஸ் மாலிக் கதாபாத்திரம் மூலம் டோலிவுட்டில் அறிமுகமாகிறார். படத்தின் நாயகியாக ஷ்ரதா ஸ்ரீநாத் நடித்திருக்கிறார். இவர் மனோயா என்ற கதாபாத்திரத்தில் நடத்துள்ளார். இவர்களுடன் ருஹானி ஷர்மா டாக்டர் ரேனுவாகவும், ஆன்ட்ரியா ஜெர்மியா ஜாஸ்மின் என்ற கதாபாத்திரத்திலும் நடித்துள்ளனர். சந்தோஷ் நாராயணன் இசையமைத்திருக்கும் படத்திற்கு ஒளிப்பதிவு பணிகளை எஸ்.மணிகண்டன் மேற்கொண்டுள்ளார். படத்தொகுப்பு பணிகளை கேரி பி.ஹெச். செய்துள்ளார்.





# விமலா ராமனுடன் இணைந்தார் அஜ்மல்

மிஷ்கின் இயக்கிய 'அஞ்சாதே' படத்தின் மூலம் தமிழில் அறிமுகம் ஆனார் அஜ்மல். கேரளாவை சேர்ந்த இவர், மலையாள படங்களிலும் நடித்து வருகிறார். இந்நிலையில் இப்போது ஒரு வேனல் புழையில் என்கிற மலையாள படத்தில் ஹீரோவாக நடிக்கிறார். இவருக்கு ஜோடியாக விமலா ராமன் நடிக்கிறார். அஜ்மல் 16 ஆண்டுகளுக்கு முன் மலையாளத்தில் பிரணய காலம் என்கிற படத்தில் அறிமுகமானார். அதில் அவருக்கு ஜோடியாக விமலா ராமன் நடித்திருந்தார். இப்போது 16 வருட இடைவெளிக்கு பிறகு இந்த படத்தின் மூலம் இவர்கள் இருவரும் மீண்டும் இணைந்துள்ளனர். இது பற்றி அஜ்மல் கூறும்போது, 'பிரணய காலம்' படம் என் வாழ்நாளில் மறக்க முடியாத படம். அதில்தான் சினிமாவுக்கு அறிமுகமானேன். அதில் என்னுடன் நடித்த விமலா ராமனை மீண்டும் இந்த படத்தில் பார்ப்பேன் என நினைக்கவில்லை. அதுவும் நடந்துள்ளது மகிழ்ச்சி' என்றார். விமலா ராமன், நடிகர் விநய்யை காதலித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# ஒரே நாளில் இருவரின் படங்கள் ரிலீஸ் அக்காவுடன் மோதும் தங்கை



இந்தி நடிகை கீர்த்தி சனோனின் தங்கை நுபுர் சனோன். பாடகியான இவர், ரவிதேஜாவின் 'டைகர் நாகேஸ்வர ராவ்' படம் மூலம் கதாநாயகியாக அறிமுகமாகிறார். அபிஷேக் அகர்வால் தயாரித்துள்ள இந்த படத்தில் அனுபம் கெர், ரேணு தேசாய், முரளி சர்மா, ஹரீஷ் பெரேடி, ஆடுகளம் நரேன் உள்பட பலர் நடித்துள்ளனர். ஜி.வி.பிரகாஷ்குமார் இசை அமைத்துள்ள தெலுங்கு, தமிழ்,

இந்தி உள்பட ஐந்து மொழிகளில் வெளியாகும் படத்தில் நடித்தது பற்றி நுபுர் சனோன் கூறியதாவது:

ரவிதேஜாவுடன் நடித்ததை அதிர்ஷ்டமாக கருதுகிறேன். நடிப்பு என்று வந்துவிட்டால் பரபரப்பாகி விடுவார்.

அக்ஷய்குமாருடன் 'ஃபில்ஹால் 2' என்ற இசை ஆல்பத்தில் நடித்தபோது, அடுத்து என்ன படம் பண்ணுகிறீர்கள்? என்று கேட்டார். இப்படம் பற்றி நான் சொன்னேன். யார் நடிக்கிறார் என்றார். ரவிதேஜா என்று சொன்னேன். 'கண்ணை மூடிக்கொண்டு ஒப்புக் கொள்ளுங்கள், நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்று உங்களுக்கு தெரியாது' என்றார். அவர் சொன்னதை படப்பிடிப்பில் உணர்ந்தேன். முதல் பட நடிகை என்று பார்க்காமல் என்னை ரவிதேஜா நன்றாக கவனித்துக் கொண்டார். இந்த படம் வரும் 20ம் தேதி வெளியாகிறது. என் சகோதரி கீர்த்தி சனோன் நடித்துள்ள 'கணபத்' இந்தி படமும் அதே நாளில் வெளியாகிறது. இரண்டு படமும் வெற்றி பெற வேண்டும் என்றார்.



# நெதர்லாந்தை வீழ்த்தியது பாக்.

ஐசிசி உலக கோப்பை ஒருநாள் போட்டித் தொடரின் லீக் ஆட்டத்தில், பாகிஸ்தான் அணி 81 ரன் வித்தியாசத்தில் நெதர்லாந்து அணியை வீழ்த்தியது. ராஜீவ் காந்தி சர்வதேசஸ்டேடியத்தில் நேற்று நடந்த இப்போட்டியில், டாஸ் வென்ற நெதர்லாந்து அணி முதலில் பந்துவீசியது. தொடக்கத்தில் 38 ரன்னுக்கு 3 விக்கெட் இழந்து தடுமாறிய பாகிஸ்தான் அணி, பின்னர் முகமது ரிஸ்வான் – சவுத் ஷகீல் ஜோடியின் பொறுப்பான ஆட்டத்தால் சரிவில் இருந்து மீண்டது. இருவரும் அரை சதம் அடித்து அசத்தினர். ஷகீல் 68 ரன் (52 பந்து, 9 பவுண்டரி, 1 சிக்சர்), ரிஸ்வான் 68 ரன் (75 பந்து, 8 பவுண்டரி), முகமது நவாஸ் 39, ஷதாப் கான் 32 ரன் எடுக்க, பாகிஸ்தான் 49 ஓவரில் 286 ரன் குவித்து ஆல் அவுட்டானது. நெதர்லாந்து தரப்பில் பாஸ் டி லீட் 4 விக்கெட் வீழ்த்தினர். அடுத்து களமிறங்கிய நெதர்லாந்து 41 ஓவரில் 205 ரன் எடுத்து ஆல் அவுட்டாக, பாகிஸ்தான் 81 ரன் வித்தியாசத்தில் வென்றது. நெதர்லாந்து தரப்பில் விக்ரம்ஜித் 52, பாஸ் டி லீட் 67, லோகன் வான் பீக் 28 ரன் எடுக்க, மற்ற வீரர்கள் கணிசமாக ரன் குவிக்கத் தவறினர்.

# ஐஎஸ்எல் கால்பந்து தொடர் சென்னை – கொல்கத்தா இன்று பலப்பரீட்சை

ஐஎஸ்எல் கால்பந்து தொடரில் சென்னையின் எப்சி – மோகன் பகான் எஸ்ஜி அணிகள் மோதும் போட்டி, சென்னை நேரு ஸ்டேடியத்தில் இன்று இரவு நடக்கிறது. நடப்பு சாம்பியனான கொல்கத்தா இதுவரை விளையாடிய 2 ஆட்டங்களிலும் வென்று புள்ளிப் பட்டியலில் முதல் இடத்தில் இருக்கிறது. சென்னை அணி தான் விளையாடிய 2 ஆட்டங்களிலும் தோற்று புள்ளிப் பட்டியலில் கடைசி இடத்தில் உள்ளது. அதுமட்டுமல்ல... நடப்புத் தொடரில் இன்னும் கோலடிக்காத ஒரே அணியாகவும் சென்னை அணி உள்ளது.

இந்நிலையில், செய்தியாளர்களை நேற்று சந்தித்த சென்னை அணியின் தலைமை பயிற்சியாளர் ஒவன் கோயல், 'இப்போது 2 ஆட்டங்களை தான் முடித்துள்ளோம். மொத்தம் 22 ஆட்டங்கள் இருக்கின்றன. அவற்றை நேர்மறையாக எதிர்கொள்வோம். நான் பல ஆண்டுகளாக பயிற்சியாளராக இருக்கிறேன்.

எதை எப்படி எங்கு சரி செய்ய வேண்டும் என்ற அனுபவம் உள்ளது. எனக்கு இருக்கும் நம்பிக்கை வீரர்களிடமும் உள்ளது. அதனால் மீண்டு வருவோம். வலுவான அணியாக இருக்கும் கொல்கத்தாவை எதிர்கொள்வதற்கான திட்டங்களை வைத்திருக்கிறோம். அதனை செயல்படுத்துவோம் ' என்றார்.

# சூரியகுமார் சிறப்பாக விளையாடுவார்: டிராவிட் நம்பிக்கை

இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர் ராகுல் டிராவிட், சென்னையில் நேற்று மாலை செய்தியாளர்களிடம் கூறியதாவது: உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ள சுப்மன் கில் தொடர்ந்து மருத்துவர்கள் கண்காணிப்பிலும் சிகிச்சையிலும் இருக்கிறார். போட்டி தொடங்க இன்னும் 36 மணி நேரத்திற்கு மேல் உள்ளது. எனவே, ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் கில் களம் இறங்குவாரா என்ற கேள்விக்கு இடமில்லை. சூரியகுமார் யாதவ் தொடர்ந்து சிறப்பாக விளையாடி வருகிறார். தன்னம்பிக்கையுடனும் செயல்பட்டு வருகிறார். ஒரு வீரர் இரண்டு போட்டியில் நன்றாக விளையாடிவிட்டு மற்ற இரண்டு ஆட்டங்களில் சரியாக விளையாடவில்லை என்பதற்காக அணியில் சேர்க்கலாமா வேண்டாமா என்று விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர் டி20 யில் விளையாடுவது போன்று இல்லாமல் ஒருநாள் போட்டிக்கேற்ப விளையாட வேண்டும் என்பதையும் கவனத்தில் கொண்டுள்ளார். இந்திய அணியை பொறுத்தவரை நடுவரிசையில் ரன் குவிப்பது கூடுதல் முக்கியம். எதிரணிக்கு பந்துவீசும்போது விக்கெட்களை வீழ்த்துவதும் அவசியம். அது குறித்தும் திட்டமிட்டு இருக்கிறோம். ஒவ்வொரு ஆட்டத்தையும் நம்பிக்கையுடன் எதிர் கொள்வோம்.










Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.